O.S. No.24/2024

**22.07.2025**

**பி.சா. 1**

**திருமதி கோப்பெருந்தேவி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். என் கணவர் ராஜேந்திரன் குவைத் நாட்டில் கம்பெனியில் வேலை பார்த்தார். எந்த கம்பெனி என்று எனக்கு ஞாபகமில்லை. என் கணவர் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளார். நான் சொல்வதுபோல் என் கணவர் குவைத்தில் கம்பெனியில் வேலை செய்யவில்லை எனவும் வீட்டில் Security யாக வேலை பார்த்தார் எனவும் சொன்னால் தவறு. வாதி துரைமுருகன் என்னுடைய 2-வது மகன். அவரும் 2002ம் ஆண்டு வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் ஆமாம். என் கணவர் எந்த வருடம் இந்தியா வந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் கணவர் இந்தியா வந்த பின்தான் சொத்துக்களுக்கான கிரய பத்திரம் ஏற்பட்டது என்றால் ஆமாம். கிரய பத்திரம் ஏற்படுவதற்கு முன்பு கிரய ஒப்பந்தம்

ஏற்பட்டதா என்றால் பாண்டியனிடம்தான் வாங்கப்பட்டது, கிரய ஒப்பந்தம் போட்டார்களா என்று எனக்கு தெரியாது. 2002 ஆம் ஆண்டு வாக்கில் வெளிநாட்டில் வசிப்பவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொள்வது என்பது மிகவும் குறைவு என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் குடும்ப விஷயங்களை தபால் எழுதி தெரிவிப்பதுதான் என்றால் ஆமாம். அதுபோன்று என் மகன் துரைமுருகனுக்கு நானும் என் கணவரும் தபால் எழுதி அனுப்பியுள்ளோம் என்றால் சரி. வழக்கில் வாதி கூறியுள்ள வாரிசுகள் விபரம் சரியா என்றால் சரிதான். என் கணவருக்கு அத்திக்கடையில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 2 கணக்குகள் இருந்தன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வங்கியில் எனக்கு ஒரு கணக்கு உண்டு என்றால் ஆமாம். வழக்கு சொத்து தவிர வல்லத்தில் ஒரு மனை, தஞ்சாவூரில் 2 மனைகள், கூத்தாநல்லூர் அத்திக்கடையில் வீடுடன் கூடிய ஒரு மனை உண்டு என்றால் சரிதான். அத்திக்கடையில் உள்ள வீடு எங்களுடைய பூர்வீக சொத்து என்றால் சரி. வல்லம் மற்றும் தஞ்சாவூரில் உள்ள மனைகள் அனைத்தும் என் கணவர் சம்பாதித்து வாங்கிய மனைகள் என்றால் சரி. வழக்கு சொத்து மற்றும் நான் மேற்கூறிய சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் எங்களுக்கு கிடையாது. மனைக்கட்டு, வீடு ஆகியவற்றில் பெரிய வருமானம் எதுவும்

கிடையாது என்றால் சரி. பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு நாங்கள் சொத்துக்கள் எதுவும் கிரயம் பெறவில்லை. என் கணவரின் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் கணவர் நடத்திவந்த புகழ்பெற்ற டைலரிங் கடையின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. ஆனால், அத்திக்கடையில் டைலரிங் கடை வைத்தார். அதேபோல் அந்த கடையை எந்த ஆண்ட வைத்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. என் கணவர் வெளிநாட்டிலிருந்து வந்தபின் குடல் இறக்க அறுவை சிகிச்சை செய்து கொண்டார் என்றால் ஆமாம். அவ்வாறு அறுவை சிகிச்சை செய்தவர்கள் கடினமான வேலையை செய்ய முடியாது என்றால் சரி. ஆனால், என் கணவர் கடினமான வேலை செய்தார். என் கணவர் குடல் இறக்க அறுவை சிகிச்சைக்கு பின் கடினமான வேலை செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. என் கணவர் டைலரிங் கடை வைத்து மாதம் எவ்வளவு சம்பாதித்தார் என்று என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரி. 2004-2005 ல் வாதி துரைமுருகன் குவைத் நாட்டில் இருந்தார் என்றால் ஆமாம். எனக்கு அத்திக்கடை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கணக்கு எண் 8416 என்ற கணக்கு இருந்தது

என்றால் கணக்கு எண் ஞாபகமில்லை. 2003 ஆம் ஆண்டு குடும்ப செலவிற்காக மாதம் ரூ.5,000/- எனது வங்கி கணக்கில் செலுத்தியிருந்தார் என்றால் ஆமாம். சாட்சி மீண்டும் ஒவ்வொரு மாதமும் எனது வங்கி கணக்கில் பணம் போடவில்லை என கூறுகிறார். வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. பாண்டியன் என்பவரிடம் இடத்தை வாங்குவதற்காக என் கணவர் கிரய ஒப்பந்தம் போட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த கிரய ஒப்பந்தத்தில் முழு தொகையும் கொடுக்காமல் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்துதான் கிரயம் பெறப்பட்டது என்றால் என் கணவர் சம்பாதித்த தொகையை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கொடுத்தோம். மேற்படி விபரத்தை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரி. நிலம் வாங்கிய விபரம் மற்றும் பணம் கொடுத்த விபரத்தை கடிதம் மூலம் என் மகனுக்கு தெரிவித்தோம் என்றால் சரி. இடம் கிரயம் பெற்ற பின்னரே அந்த இடத்தில் மாடி வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரி. இந்த விபரத்தையும் என் கணவர் வாதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார் என்றால் சரி. எங்கள் குடும்பத்தில் அதிக வருமானம் ஈட்டியவர் வாதி துரைமுருகன்தான் என்றால் சரி, என் கணவர் சம்பாதித்து சொத்துக்களை வாங்கினார். வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால்

தவறு. வாதி துரைமுருகனுக்கு வீடு கட்டிய பின்தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரி. 3, 4 பிரதிவாதிகள் வாதியின் பெயரில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரி. வாதியும் மேற்படி இருவர் மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். வாதியின் வருமானத்தை கொண்டுதான் தாவா சொத்து வாங்கப்பட்டது என்றால் தவறு. 2024 க்கு முன்பு எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் சுமூக உறவு இருந்தது என்றால் சரி. இந்த சொத்துக்களை கிரயம் பெற்ற சமயத்தில் என் கணவருக்கு எந்த வருமானமும் கிடையாது எனவும் வாதிதான் கொஞ்சம் கொஞ்சமாக பணம் அனுப்பி தாவா சொத்து வாதிக்காக கிரயம் பெறப்பட்டது என்றால் தவறு. குடும்பம் பெறப்பட்ட கடன்களை வாதிதான் சம்பாதித்து அடைத்தார் என்றால் தவறு. வீடு கட்டியதற்கான பணத்தை வாதி அனுப்பிதான் வீடு கட்டப்பட்டது என்றால் முழுவதும் அவர் கொடுக்கவில்லை, எங்களின் உழைப்பும் அதில் அடங்கியுள்ளது. நான் எந்தவொரு பங்களிப்பும் அளிக்கவில்லை எனவும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் எனவும் சொன்னால் தவறு. வாதி சம்பாதித்த தொகை முழுவதும் என் கணவரின் வங்கி கணக்கிற்குதான் அனுப்பியிருக்கிறார் என்றால் இருக்கலாம். 2006 ம் ஆண்டு என் கணவர் அத்திக்கடை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அடமான கடன் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. என் கணவர் பெற்ற அடமான கடன் தொகையை வாதிதான் முழுவதுமான அடைத்தார் என்றால் தவறு. என் கணவர் இறந்த பிறகு வாதி என் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளார் என்றால் ஒரே ஒரு முறை பணம் அனுப்பினார், அதுவும் அவருடைய செலவிற்காகத்தான். வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதியின் பணத்தை கொண்டு கிரயம் பெறப்பட்டது எனவும் கிரய தொகையை என் கணவரால் கொடுக்கபட்டிருந்தால் அவருடைய வருமானத்தை காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் எனவும் வழக்கு சொத்து முழுக்க முழுக்க வாதிக்கு சொந்தமானது எனவும் வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியது எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.07.22 15:08:26 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.